குறிப்பது போல் இல்லை என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். எனவே, நகைச்சுவை உணர்வோடு போடப்பட்டது என்று ஆசிரியர் கூறியுள்ளதால், இந்த அவை தனது கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரியான கார்ட்டூன்கள் போடும்போது, அவையையோ அல்லது அவை உறுப்பினர்களையோ பற்றி எந்தவிதமான தவறான கருத்திற்கும் வாசகர்களைக் கொண்டு போவதற்கு வழி இல்லாமல் இருப்பது நல்லது என்ற அறிவுரையையும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உரிமைப் பிரச்னை.

இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது,—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையைக் கொண்டுவர அனுமதி கேட்டுள்ளார். அவையில் அப் பிரச்சனையைக் கொண்டுவர அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் வருத்தத்தோடுதான் நான் மீண்டும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் மீது இப்படிப்பட்ட ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனக்கு இந்தப் பத்திரிகையைப் பழிவாங்கும் எண்ணம் சுத்தமாக இல்லை என்பதை முதலிலே கிளியர் செய்துவிட்டு, அதே நேரத்திலே அங்கத்தினர்களுடைய அந்தஸ்து பற்றிய பிரச்னை இந்த அவையிலே வருகின்ற போது, அதிலே நான் பெர்மாக டிபெண்டு பண்ணுவேன். இதிலே என்ன கான்சிகுவென்சு வந்தாலும் நான் கவலைப்படவில்லை.

அன்றைக்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மீது நான் எழுப்பிய உரிமைப் பிரச்னை பற்றி தாங்கள் ஏற்கனவே ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே 3 அம்சங்கள் தெளிவாக இருக்கின்றன.

இன்று, அதனுடைய எடிட்டர் கொடுத்திருக்கக்கூடிய கடிதத்தில் வருத்தம் தெரிவித்திருக்கிறார். இரண்டாவது, இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பேன், இந்தமாதிரி விஷயத்தில் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் செய்தி ஜனங்கள் பூராவுக்கும் போயிருப்பதால் இந்தச் செய்தியும் மாநிலம் பூராவும் போக வேண்டுமென்றால் அதை அப்படியே பிரசுரித்திருக்க வேண்டும்

1978 மார்ச் 1] [திரு. ரா. உமாநாத்]

ஆனால், அந்த இரண்டு ஐட்டங்களையும் பிளாக் அவுட் பண்ணி யிருக்கிறார்கள். உங்கள் முடிவை அப்படியே தந்திருக்க வேண் டும். அதையும் பிளாக் அவுட் பண்ணியிருக்கிறார்கள்.

இன்றைக்குப் பேப்பரில்—

'The speaker, Mr. Munu Athi accepted the explenation of the Editor of the Newspaper and ruled that no further action was necessary,

என்ன எக்ஸ்பிளனேஷன் ?

'We wish to submit that the main thrust of the report is to highlight the difficulties experienced by the employees in getting their C.D. amount refunded. The heading of the report as well as the opening paragraphs bear out own intentions.

It was not our intention to malign any member of the Legislativn Assembly or impute any motives to the members. We regret a portice of the report has given rise to an issue of privilage of the House and its members... ..

அந்த ரிக்ரட்டும் போடவில்லை ; இனிமேல் செய்ய மாட் டோம் என்பதையும் போடவில்லை. உங்கள் வார்னிங்கையும் போடவில்லை. டெலிபரேட்டாகச் செய்திருக்கிறார்கள். இரண் டையும் பிரசுரிக்க இடம் இல்லையா என்று பார்த்தால் மறு பக்கத்தில்—

Why case against express was droppec,

சுப்ரீம் கோர்ட் டெசிஷன் ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். உங்கள் டெசிஷனைப் போட, ரூலிங்கைப் போட இடம் இல்லா மல் போய் விட்டதா ? நான் அன்று கமிட்டிக்கு விட வேண்டு மென்று சொன்னேன். தாங்கள் அவர்களுடைய அபாலஜியை ஏற்றுக் கொண்டீர்கள். அதைக் கூட—

The letter from the editor read out by the speaker stated that the main thrust of the report was to highlight the difficulties in getting the C. D. amount, etc., etc.. ....

இன்று, ஒன்று கமிட்டிக்கு விட வேண்டும், அதை உங்கள் முடிவுக்கு விடுகிறேன். அல்லது, நாடாளுமன்றத்தில் ஒரு முறை இருக்கிறது. அருமை நண்பர் மனோகரன் அவர்களுக்கு, நிதி யமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட விஷயத்தை கமிட்டிக்கு விடுவதில் இருந்து குறைந்த பனிஷ்மென்ட் கொடுப்பது என்றால் என்ன செய்வார்கள் என்றால் இரண்டு தரம் அல்லது மூன்று தரம் அந்தப் பத்திரிகையில் சீக்வன்சோடு பிராமினென் டாக புல் டெக்ஸ்ட் Cons cutively பப்ளிஷ் பண்ண வேண்டு மென்று செய்வது உண்டு. இந்த இரண்டில் எந்த முடிவு எடுப்பது என்பதைத் தங்களிடம் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்த தீர்ப்பைப் பின்னால் அளிக்கிறேன்.